**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2022ம் வருடம் செப்டம்பர் திங்கள் 23ம் நாள் வெள்ளிக்கிழமை</u>

**<u>அ.வ.எண்.263/2021 இல் இ.ம.எண்.02/2021</u>**

கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, வடக்குகாடு கிராமம், மாப்பிள்ளைகவுண்டன்புதூர் அஞ்சல், சேர்வைகாரன்பாளையம், தோட்டத்துச் சாளை, கதவு எண்.8/89–B என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.P.சிவராஜ் மனைவி சுமார் 46 வயதுள்ள திரு.C.கற்பகம்.

... மனுதாரர் /வாதி

/ எதிர் /

கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, வடக்குகாடு கிராமம், மாப்பிள்ளைகவுண்டன்புதூர் அஞ்சல், சேர்வைகாரன்பாளையம், தோட்டத்துச் சாளை, என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.பழனிச்சாமி கவுண்டர் மகன் சுமார் 50 வயதுள்ள திரு.P.சக்திவேல்.

... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

தாவா சொத்தினை மனுதாரர் / வாதி தனது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது உறவினர்களோ, உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் இடைஞ்சல் செய்யக் கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 29.09.2021

இம்மனுவானது கடந்த 24.08.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.செல்வகுமார் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / வாதி மற்றும்

எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**இறுதி உத்தரவு**

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது உறவினர்களோ, உள்ளீட்டாளர்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

**சொத்து விபரம்**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், புரவிபாளையம் தாக்கல், சேர்வகாரன்பாளையம் கிராமம் புலத்தில் UDR பட்டா எண்.517. புதிய பட்டா எண்.1304. க.ச.எண்.6/1D1 நெ. காலை பு.ஹெக்.1.55.00 (பு.ஏ.3.83)க்கு தீ. ரூ.4.29. இந்த பூமிகளும், மேற்படி பூமிகளுக்கு போகவர உள்ள மாமூல் தட பாத்தியங்களும் சகிதம்.

இவ்வுத்தரவு 2022ம் வருடம் செப்டம்பர் மாதம் 23ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொள்ளாச்சி.

---

**இறுதி உத்தரவு**
அ.வ.எண்.263/2021 இல் இ.ம.எண்.02/2021
நாள் : 23.09.2022
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---